தொலைத் தொடர்பு தோழன்

THOLAI THODARBU THOZHAN - Tamil Monthly

மலர் - 3 VOLUME - 3 | இதழ் - 10 ISSUE - 10 | மே - 2018 MAY - 2018 | விலை ரூ.5/- Rs. 5/-

மே 1

உழைப்பாளி மக்களின்
ஒட்டுமொத்த விடுதலையை
நோக்கி...

அனைவருக்கும்
மே தின வாழ்த்துக்கள்!

தேசத்திற்கே அவமானம்

காஷ்மீர் மாநிலம் கத்வாவில் 8 வயது சிறுமி அஷிபா 8 கயவர்களால் 8 நாட்களாக பாலியல் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டு உள்ளாள். அந்த 8 நாட்களும் புனித வழிப்பாட்டுத்தலமாகிய கோவிலிலேயே அடைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டு சடலமாக காட்டிற்குள் வீசப்பட்டுள்ளாள். இந்த செய்தியை கேட்டவுடன் ஒவ்வொரு இந்தியனின் நெஞ்சமும் கலங்கி போனது. கண்ணீர் வெள்ளமென பெருகி பாய்ந்து ஓடியது. அந்த சிறு குழந்தை தவித்த தவிப்பை நினைத்து இன்றும் தூங்காமல் தவிக்கிறோம். இந்த கொடூரத்துக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டியது தான் மனித அறம். ஆனால் மத அடையாளத்தை முன்னிறுத்தி குற்றம் சாட்டப்பட்டுவர்களுக்கு ஆதரவாக இந்து ஏக்தா மஞ்ச் என்ற இந்துத்வா அமைப்பு பேரணி நடத்தியது.இந்த பேரணியில் பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் , காஷ்மீர் வனத்துறை அமைச்சர் சௌத்திரி லால் சிங், தொழில் துறை அமைச்சர். சி.பி.கங்கா ஆகியோர் கலந்து கொண்டு தேசிய கொடிகளை பறக்கவிட்டு குற்றம் சாட்டப்பட்ட வர்களுக்கு ஆதரவாக முழங்கியது கண்டனத்துக்குரியது. அஷிபா சார்ந்த இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட பகோ் வால் நாடோடி சமூகத்தினரை தங்கள் கிராமத்தில் இருந்து துரத்துவதற்காக இக்கொடூரச்செயலை செய்ததாக இந்த கயவர்கள் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

ஆணாதிக்க திமிர், அதிகார போதை, மதவாத அரசியல் மற்றும் பழங்குடிமக்களுக்கு எதிரான மன நிலை ஆகிய எல்லாமும் சேர்ந்து அஷிபாவை குதறி போட்டிருக்கிறது.

அந்த குழந்தையின் உடல் கண்டெடுக்கப்பட்ட பிறகு இறுதி அடக்கம் நடந்த கிராமத்திற்கு குடிநீர் வினியோகம் ஒரு வாரத்திற்கு நிறுத்தப்பட்டது. அதிகார வர்க்கம் இப்பிரச்சனையை அமுக்கப்பார்த்த பின்பும் நியாயத்தின் பக்கம் நின்று வெளி உலகிற்கு கொண்டு வந்தவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் தோழர்.முகமது யூசுப் தாரிக் காமி. மேலும் இந்த வழக்கில் அஷிபாவிற்கு ஆதரவாக நீதிமன்றத்தில் போராடி வரும் வழக்கறிஞர் தீபிகா சிங் ராஜா வர்த் அவர்களை வன்புணர்வு செய்து கொலை செய்வோம் என மிரட்டல் விடப்படுகிறது. இத்தனையும் மீறித்தான் அந்த எட்டு கயவர்களுக்கும் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என தொடர்ந்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

உனா:- உத்திர பிரதேசம் உனாவில் பாரதிய ஜனதாகட்சி சட்டமன்ற உறுப்பினர். புல்தீப் சிங் கிடம் உதவி கேட்டுச்சென்ற சிறுமியை சட்டமன்ற உறுப்பினரும்,அவரது சகோதரர் உட்பட சிலரும் கூட்டாக சேர்ந்து பாலியல் பலாத்காரம் செய்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட அந்த பெண் தந்தையுடன் சென்று காவல் துறையில் நியாயம்கேட்டு பாரதிய ஜனதா சட்டமன்ற உறுப்பினர். மீது புகார் கொடுத்திருகிறார். அந்த புகாரை திரும்ப பெறக்கோரி அந்த சிறுமியின் தந்தையை சட்ட மன்ற உறுப்பினரின் ஆட்கள் தாக்கி இருக்கிறார்கள்.

இதையும் புகாராக காவல் நிலையத்தில் கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் உத்திரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத் வீட்டிற்கு முன் சென்று அந்த சிறுமியே நீதி கேட்டு போராடுகிறாள். ஆனாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இந்த நேரத்தில் அச்சிறுமியின் தந்தையை காவல்துறை பொய் வழக்கு ஒன்றினை புனைந்து கைது செய்கிறது. போலீஸ் காவலில் இருந்த அந்த சிறுமியின் தந்தை கடுமையாக தாக்கப்பட்டதால் மரணம் அடைந்து விட்டார். அதன்பிறகுதான் இந்த விசயமே வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இதை எதிர்த்தும் கடுமையான போராட்டங்கள் வெடித்துக்கிளம்பியுள்ளன.

மக்கள் மத்தியில் எழுந்த கோப அலையை , பாஜகாவிற்கு எதிரான மன நிலையை ஆட்சியாளர்கள் உணரவில்லை. எனினும் மக்களின் கோபத்திற்கு வடிகாலாக “12 வயதிற்குட்பட்ட குழந்தைகளை பாலியல் பலாத்தகாரம் செய்பவர்களுக்கு தூக்குத்தண்டனை என்ற அவசர சட்டத்தை கேபினட் கூட்டம் இயற்றியுள்ளது.

உலக நாடுகள் முழுவதும் அமெரிக்கா உட்பட பிரதமர் நரேந்திர மோடியை எச்சரித்துள்ளன. இந்தியாவில் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு கொடுப்பது அவசியமாகும் என்ற செய்தியை எச்சரிக்கையாக விடுத்துள்ளன. மோடி காதுகள் அபலக்குரலையும், கண்ட குரலையும் கேட்க வேண்டும்.

நீர்த்து போகச்செய்யும்– உச்ச நீதிமன்ற தீர்ப்பு

சமீபத்தில் உச்ச நீதிமன்றம் தலித்துக்கள் / பழங்குடியினர் வன்கொடுமை தடைச்சட்டத்தின் (1989) சரத்துக்கள் நீர்த்துப்போகக்கூடிய வகையில் தீர்ப்பினை வழங்கியுள்ளது. வன்கொடுமை தடைச்சட்டத்தில் இனிமேல் புகார் கொடுக்கப்போனால் குற்றம் சாட்டப்பட்டவருடைய உயர் அதிகாரியிடம் அல்லது காவல் துறை அதிகாரியிடம் அனுமதி பெற்ற பிறகே வழக்கு பதிவு செய்யப்படும் என்பதே சமீபத்திய தீர்ப்பின சாரம்சமாகும். இது முற்றிலும் பாதிக்கப்படக்கூடிய தலித்துக்கள் மற்றும் பழங்குடியினருக்கு இருந்த பாதுகாப்பு வளையத்தை நீக்கி விடும் செயலாகும். இதுவரை இருக்கக்கூடிய சட்டத்தின் மூலமாகக்கூட பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்காத சூழலில் இந்த தீர்ப்பு பெரும் கோபத்தினை உருவாக்கியது.இதை எதிர்த்து ஏப்ரல் இரண்டாம் தேதி பல்வேறு தலித் அமைப்புகள் சார்பில் விடுப்பட்ட பந்த் அறைகூவலுக்கு வட இந்திய முழுவதும் குறிப்பாக குஜராத், ஒடிசா போன்ற மாநிலங்களில் பெரும் பங்கேற்பு இருந்தது.வட இந்தியாவில் பாஜக ஆளும் மாநிலங்களில் தலித்துகளுக்கு எதிரான வன்முறையை அப்பட்டமாக அவிழ்த்து விடப்படுகிறது. மத்தியிலும், மாநிலங்களிலும் ஆளும் பாஜக அரசாங்கங்களின் இத்தகைய தலித் விரோத நடவடிக்கைகளுக்கு ஊக்கம் ஊட்டும் வகையில் இந்த தீர்ப்பு அமைந்துள்ளது. ஆகவே தான் இதை எதிர்த்து ஏப்ரல் 2 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மீது காவல் துறை நடத்திய துப்பாக்கிச்சூட்டின் காரணமாக 9 தலித்துக்கள் உயிர் இழந்துள்ளனர்.

மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இந்த தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளன. இந்த தீர்ப்பிற்கு எதிராக மத்திய அரசு மேல் முறையீடு செய்து வன்கொடுமை தடை சட்டத்தை பாதுகாக்கும் வகையில் உச்ச நீதிமன்றத்தில் உறுதியுடன் வாதாட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திதான் பாரத் பந்த் நடைபெற்றது. சமூக நீதிக்காக போராடிய தலித் மக்கள் மீது மாநில பாஜக அரசுகளின் காவல் துறை நடத்தி உள்ள காட்டுமிரண்டித்தனமான தாக்குதல்களை வன்மையாக கண்டிக்கின்றோம்.

உயர் கல்வி நிலையங்களில் பயிலும் தலித் மாணவர்களுக்கு பாஜகவும், அதன் பரிவாரங்களும் கொடுக்கின்ற நெருக்கடிகளின் காரணமாக ரோகித் வெமுலா உட்பட பல்வேறு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இந்திய நாடு முழுவதும் பசுக்களை பாதுகாக்கிறோம் என்ற போர்வையில் தலித்துகள் தாக்கப்படுகின்றனர். பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு இப்படிப்பட்ட நிகழ்வுகள் நாடு முழுவதும் சங்பரிவாரங்களால் அமலாக்கப்படுகிறது.

தற்போது தேசம் தழுவிய அளவில் போராட்டம் வலுத்துள்ள நிலையில் மத்திய அரசு உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக மேல் முறையீடு செய்துள்ளது. தலித் பழங்குடி மக்களை பாதுகாக்கும் வகையிலும் தற்போதுள்ள வன்கொடுமை தடுப்புச்சட்டத்தை உறுதிபட அமல்படுத்தும் வகையிலும் மத்திய அரசு திறமையான வழங்கறிஞர்களை நியமனம் செய்து வலுவான சட்ட பூர்வமான வாதங்களை முன்வைக்க வேண்டும் என்பதே நமது கோரிக்கையாகும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் மாநிலத்தில் உள்ள அனைத்து சங்கங்களும் 10.04.2018 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளன. ■

BSNLEU

உள்ளே...

மே - 1	1
தேசத்திற்கே அவமானம்	2
உச்சநீதிமன்ற தீர்ப்பு...	3
துணை டவர் நிறுவனத்தை...	4
அகர்தலா மத்திய செயற்குழு	6
ஊதியமாற்றத்தில் இன்றைய...	9
BSNL செய்திகள்	10
சரித்திர சாதனை...	12
ஒப்பந்த ஊழியர்களின்...	13
கடலூர் கருத்தரங்கம்	14
கருத்தரங்கத்தின் பிரகடனம்	15
நடைமுறையே நோக்கம்	16
பணி ஓய்வு	17
தர்ணா போராட்டக் காட்சிகள்	19
கண்டன ஆர்ப்பாட்டங்கள்	20

துணை டவர் நிறுவனத்தை அனுமதியோம்

BSNL நிறுவனத்தில் உள்ள டவர்களை எல்லாம் தனியாக பிரித்தெடுத்து ஒரு துணை டவர் நிறுவனம் அமைக்க மத்திய அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. அதனை எதிர்த்து BSNLல் உள்ள அனைத்து சங்கங்களும் இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் உள்ளிட்ட பல கட்ட போராட்டங்களை நடத்தியுள்ளன. ஆனாலும் அந்த நிறுவனம் அமைப்பதற்கான BSNLன் இயக்குனர் குழு ஒப்புதல் தர வேண்டும் என தொலை தொடர்பு துறை நமது நிறுவனத்தை வற்புறுத்தி வருகின்றது. துணை டவர் நிறுவனம் அமைக்கப்பட்டது என்றால் அது BSNL நிறுவனத்தை அழித்து விடும் என்பதால் ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL சார்பாக நாடுதழுவிய அளவில் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றது.

27.03.2018 ஆர்ப்பாட்டம்:-

27.03.2018 அன்று மாவட்ட, மாநில அகில இந்திய தலைமை அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்ட அறைகூவல் விடப்பட்டது. அதன் அடிப்படையில் புதுடெல்லியில் உள்ள சஞ்சார் பவன் முன்பு அனைத்திந்திய சங்கங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தமுடிவு செய்திருந்தன. சஞ்சார் பவன் முன்பு BSNL உருவாக்கப்பட்ட 18 ஆண்டுகளில் இதுவரை ஆர்ப்பாட்டம் எதுவும் நடைபெற்றதில்லை. வரலாற்றில் முதல் முறையாக சஞ்சார் பவன் முன்பு தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம் நடத்த இருந்த நேரத்தில் சஞ்சார் பவன் தொலை தொடர்பு அமைச்சகம் உள்ள இடத்தில் இருப்பதால் காவல் துறை அதற்கு அனுமதி மறுத்தது. ஆனாலும் திட்டமிட்டபடி ஆர்ப்பாட்டம் நடத்த மத்திய சங்கங்கள் முடிவெடுத்தன. கார்ப்பரேட் அலுவலக ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க இயலாத வண்ணம் 12.45 மணிக்கு கார்ப்பரேட் அலுவலகத்தின் வாயிற்கதவுகளை காவல் துறை வெளிப்புறமாக பூட்டியது. சஞ்சார் பவன் முன்பு காவல்துறை தனது காவலர்களை குவித்தது. ஆனால் அனைத்து தடைகளையும் தாண்டி 150க்கும் மேற்பட்ட தோழர்கள் சஞ்சார் பவன் முன்பு திரண்டனர். துணை டவர் நிறுவனத்தை திரும்ப பெற வேண்டும் என்றும், ரிலையன்ஸ் ஜியோவிற்கு

ஆதரவாக BSNLஐ கூறுபோடக் கூடாது என்றும் விண்ணதிரும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து தோழர்களையும் காவல் துறை அவசர அவசரமாக வாகனத்தில் ஏற்றி பாராளுமன்ற வீதி காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அனைத்து தோழர்களும் மாலை விடுவிக்கப்பட்டனர். இந்த போராட்டத்தில் உ.பி(மேற்கு) மற்றும் ஹரியானா மாநிலத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான தோழர்கள் பங்கேற்றது பாராட்டுக்குரியது. சிறை சென்றாலும் நமது கோரிக்கைகளை வென்றடைய போராட்டத்தை நடத்திய மத்திய சங்கங்களையும் பங்கேற்ற தோழர்களையும் தமிழ் மாநில சங்கம் மனதார வாழ்த்துகிறது. மத்திய சங்கங்களின் இந்த போராட்டம் நாடு முழுவதும் உள்ள ஊழியர்களிடையே மிகப்பெரிய எழுச்சியை உருவாக்கியது.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இந்த போராட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. தூத்துக்குடி மாவட்டத்தில் ஒப்பந்த ஊழியர்களின் வேலை நீக்கத்திற்கு எதிராக இரண்டு நாட்களாக காத்திருப்பு போராட்டம் நடைபெற்ற போதும் அந்த போராட்டத்திற்கு இடையேயே மதிய நேர ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது. கோவையில் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பிப்ரவரி மாத ஊதியம் வழங்க வேண்டும் என்ற காத்திருப்பு போராட்டத்திற்கு இடையேயும் இந்த போராட்டம் நடைபெற்றது. அனைத்து மாவட்ட சங்கங்களையும், குறிப்பாக தூத்துக்குடி மற்றும் கோவை மாவட்ட சங்கங்களையும் தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது.

சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் மாநில சங்கங்களின் சார்பாக இந்த போராட்டம் 200க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்ற எழுச்சியான போராட்டம் நடைபெற்றது. அனைத்திந்திய அளவில் FNTO சங்கம் ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL அமைப்பில் இருந்த போதும் தமிழ் மாநில சங்கம் இது நாள் வரை நமது இயக்கங்களில் கூட்டாக பங்கேற்பதில் சில சிரமம் இருந்தது. ஆனால் சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற FNTO தமிழ் மாநில மாநாட்டில் புதியதாக மாநில செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட அருமை தோழர் R.ஜெயபாலன் நமது அழைப்பை ஏற்று இந்த போராட்டத்தில் தங்களின் தோழர்களோடு பங்கேற்றது தமிழ் மாநில ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL அமைப்பிற்கும், அனைத்து தோழர்களுக்கும் மகிழ்ச்சியையும், புதிய எழுச்சியையும் கொடுத்தது. தோழர்கள் A.பாபு ராதாகிருஷ்ணன் (BSNLEU), K.நடராஜன் (NFTE), R.ராஜசேகர் (SNEA), C.துரையரசன் (AIBSNLEA), R.ஜெயபாலன் (FNTO), C.பலராமன் (SEWA BSNL) மற்றும் K.கிருஷ்ணன் (TEPU) ஆகிய மாநில செயலாளர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். AIBDPA சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் C.K.நரசிம்மன் வாழ்த்துரை வழங்கினார். மதிய உணவு நேரத்தில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் அனைத்து மாநில செயலாளர்களும் தலைமை பொது மேலாளரை சந்தித்து நமது கோரிக்கை மனுவை வழங்கி கார்ப்பரேட் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

12.04.2018 பெருந்திரள் தர்ணா:-

புதுடெல்லியில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னர் ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL தலைவர்கள் அடுத்த கட்ட போராட்டங்களுக்கு அறைகூவல் விடுத்தனர்.

அதன் அடிப்படையில் நாடு முழுவதும் 12.04.2018 அன்று பெருந்திரள் தர்ணா நடைபெற்றது. தமிழகத்தில் அனைத்து மாவட்ட தலைநகர்களில் மட்டுமல்லாமல் பல பெரு நகரங்களிலும் இந்த தர்ணா வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. இதன் வெற்றி ஊழியர்களிடையே துணை டவர் நிறுவனம் அமைக்கப்பட்டது என்றால் அது BSNL நிறுவனத்தின் அழிவிலே தான் முடியும் என்ற உணர்வு வெளிப்படுத்தியது. துணை டவர் நிறுவனம் செயல்பட தொலை தொடர்பு துறை காட்டியுள்ளபடி BSNL இயக்குனர் குழு ஒப்புதல் கொடுக்கும் என்று சொன்னால் காலவரையற்ற வேலை நிறுத்தம் நடைபெறும் என்பதை நிர்வாகத்திற்கு AUAB சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

19.04.2018 ஆளுனர் மாளிகை நோக்கி பேரணி மற்றும் ஆளுனருக்கு மனு அளிப்பது:-

நாடு முழுவதும் 19.04.2018 அன்று துணை டவர் நிறுவனத்தை திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தி அனைத்து மாநில தலைநகர்களிலும் "ஆளுனர் மாளிகையை நோக்கி பேரணி" நடத்தி ஆளுனர்களுக்கு மனு அளிக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. நாட்டின் பல மாநிலங்களில் இந்த பேரணி நடைபெற்றது. ஆனால் தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் பேரணிக்கான அனுமதி கிடைக்கவில்லை. இன்னமும் சில மாநிலங்களில் ஆளுனரை சந்திக்கக் கூட அனுமதி மறுக்கப்பட்டது. தமிழகத்தில் ஐந்து நபர்களுக்கு மட்டுமே ஆளுனரை சந்திக்க அனுமதி கிடைத்ததால் AUABயில் உள்ள அனைத்து மாநில செயலாளர்களும் கையெழுத்திட்ட மனுவை தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் (BSNLEU), தோழர் G.S.முரளிதரன் (NFTE), தோழர் R.ராஜசேகர் (SNEA), தோழர் C.துரையரசன் (AIBSNLEA) மற்றும் தோழர் M.ஓம்பிரகாஷ் (SEWA BSNL) ஆகிய தோழர்கள் நேரடியாக ஆளுனரை சந்தித்து வழங்கினர். அவரும் இந்த மனுவை மத்திய தொலை தொடர்பு இணை அமைச்சருக்கும் அனுப்புவதாக உறுதி அளித்தார்.

தேசிய கருத்தரங்கம்:-

துணை டவர் நிறுவனத்தை திரும்ப பெறவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் புது டெல்லி மாவலங்கர் ஹாலில் 2018, மே மாதம் 9 அல்லது 10ஆம் தேதியில் ஒரு தேசிய கருத்தரங்கை நடத்துவது என்றும் அதில் முக்கியமான பாராளுமன்ற உறுப்பினர்களை உரையாற்ற அழைப்பது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

துணை டவர் நிறுவனத்தை தடுத்து நிறுத்தி நமது உயிரின் ஒளியான BSNL நிறுவனத்தை காப்பாற்ற நடைபெற உள்ள அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று வெற்றி பெறுவோம். ■

அகர்தலா மத்திய செயற்குழு

BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு ஏப்ரல் 3,4 மற்றும் 5ஆம் தேதிகளில் திரிபுரா மாநிலம் அகர்தலாவில் உள்ள பகத்சிங் இளைஞர் விடுதியில் அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர் சிங் தலைமையில் உற்சாகமாக நடைபெற்றது. தேசிய கொடியினை தோழர் பல்பீர் சிங் அவர்களும், நமதுசங்க கொடியினை பொதுசெயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும் ஏற்றி வைத்தனர். தியாகிகளின் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் பொது அரங்கு துவங்கியது. அந்த பொது அரங்கினை CITUவின் அகில இந்திய தலைவர் தோழர் ஹேமலதா துவக்கி வைத்தார். இன்றைய இந்தியாவில் பொதுத்துறை நிறுவனங்களின் மீதான தாக்குதலை எடுத்துரைத்த அவர் வலுவான ஒன்று பட்ட போராட்டங்களை முன்னெடுத்து செல்ல வேண்டும் என வழிகாட்டினார். நமது சங்கத்தின் ஸ்தாபக பொது செயலாளர் தோழர் V.A.N.நம்பூதிரி வாழ்த்துரை வழங்கினார். பின்னர் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு ஆய்படு பொருட்களின் மீது தனது அறிமுக உரை நிகழ்த்தினார். ஊதிய மாற்றம், துணை டவர் நிறுவனம் உள்ளிட்ட ஆய்படு பொருட்கள் தனியாகவும், கடந்த 8வது சென்னை அகில இந்திய மாநாடு மற்றும் மத்திய செயற்குழுக்களில் விவாதிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகள் அமலாக்கம் தொடர்பாக தனியாகவும் விவாதம் நடைபெற்றது. அதற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. துணை டவர் கம்பெனியை எதிர்த்து பிரச்சாரமும் போராட்டமும்:-

துணை டவர் கம்பெனி அமைக்கும் முடிவைக் கைவிடுமாறு கோரி, அனைத்து தொழிற்சங்கங்கள் நடத்தி வரும் தொடர்ச்சியான போராட்டங்களுக்கு மத்திய செயற்குழு கூட்டம் பாராட்டுக்களைத் தெரிவித்தது.எனினும், துணைடவர்நிறுவனத்தை செயல்படுத்துவதற்கு தொலை தொடர்பு இலாகா எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் மிகுந்த கவலை தெரிவிக்கப் பட்டது. எனவே, அனைத்து தொழிற்சங்கங்கள் விடுத்த அனைத்து அறைகூவல்களையும் பெருந்திரளாக அணிதிரட்டி நடத்திடுமாறு, அனைத்து மாநில மாவட்டச் சங்கங்களுக்கும் மத்திய செயற்குழு கூட்டம் அறைகூவல் விடுத்துள்ளது. அனைத்து தொழிற்சங்க அறைகூவல்களை நிறைவேற்றுவதோடு, பொதுமக்கள் மத்தியில் துணை டவர் நிறுவனத்திற்கு எதிராக தீவிர பிரச்சாரம் செய்யும் வகையில், குடும்ப உறுப்பினர்களோடு தர்ணா, தீப்பந்தம் ஏந்தி பேரணிகள், மாநில மாவட்ட மட்டங்களில் பத்திரிகையாளர் சந்திப்பு ஆகியவற்றையும் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். துணை டவர் கம்பெனி முடிவைக் கைவிடச் செய்ய இத்தகைய பொதுமக்கள் மத்தியிலான பிரச்சாரம் மிக அவசியம். நமது மத்திய தலைமையகம் இது குறித்து அனைத்து தொழிற்சங்கங்களோடு விவாதிக்கும்.

2. ஊதிய மாற்றம்:-

ஊதிய மாற்ற பிரச்னையில் ஒரு முறிப்பைக் கொண்டு வர அனைத்து தொழிற்சங்கங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளை மத்திய செயற்குழு கூட்டம் பாராட்டியது. மாண்புமிகு தொலைதொடர்பு மந்திரி இப்பிரச்னையை மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு கொண்டு செல்வதாக உறுதி அளித்துள்ளார். இத்தகைய சூழ்நிலையில், மேலும் விழிப்புடன் இருக்குமாறும், இறுதி தீர்வை எட்டும் வரை ஊழியர்களை போராட்ட தயார்நிலையோடு வைத்திருக்குமாறும், அனைத்து தொழிற்சங்கங்களை, மத்திய செயற்குழு கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளது.

3. 3.5.2018 அன்று கறுப்பு அட்டை ஆர்ப்பாட்டத்திற்கு அணி திரட்டுதல்:-

நமது ஊழியர்களாலேயே செய்து முடிக்கக் கூடிய பணிகளை BSNL நிறுவனம், ஒவ்வொன்றாக OUTSOURCING செய்து வருகிறது. இதன் மூலம், மிகப் பெரிய அளவில், BSNL நிறுவனத்தின் பணம் வீணடிக்கப்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இது நிறுத்தப் பட வேண்டும்.

BSNL ல் புதிய நியமனங்களை ஊழியர் பொறுத்த வரை, JE கேடரில் மட்டுமே இதுவரை நேரடி நியமனம் நடைபெற்று வருகிறது. மிகப் பெரிய அளவில் பணி ஓய்வுகள் நிகழ்ந்து வருவதால் SR. TOA கேடரில் கடுமையான ஆட்பற்றாக்குறை இருந்த போதும், அதில் நேரடி நியமனம் நடைபெறுவதில்லை. எனவே, SR. TOA கேடரில் நேரடி நியமனங்களை நிர்வாகம் மேற்கொள்ள

வேண்டும். ஏராளமான வீண் செலவுகள், BSNL நிறுவனத்தின் நிதிநிலைமையைக் கடுமையாகப் பாதித்து வருகின்றன. ஏற்கனவே இது குறித்து BSNL ஊழியர் சங்கம், BSNL CMD மற்றும், DIRECTOR(F) ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது. ஆனாலும் சமீபத்தில் இலங்கையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிக்கு கார்ப்பரேட் அலுவலகத்தின் நான்கு அதிகாரிகள் சென்று வந்ததாக தெரிய வருகிறது. இது BSNLன் உயர்மட்ட நிர்வாகத்திற்கு வீண் செலவுகளைக் குறைப்பது தொடர்பான சிந்தனையே இல்லை என்பதையே வெளிப்படுத்துகிறது. அதற்குப் பதிலாக, நிதி நெருக்கடி என்ற பெயரில், ஊழியர்களுக்கு தற்போது அமுலில் உள்ள மருத்துவ வசதிகளைக் குறைத்து நிறுத்தி விட நிர்வாகம் முயற்சி செய்து வருகிறது.

BSNL நிர்வாகத்தின் வீண் செலவுகளைக் குறைக்கக் கோரி, ஒரு விரிவான குறிப்பை நிர்வாகத்துக்கு அளிக்க, அகர்தலா மத்திய செயற்குழு கூட்டம் முடிவு செய்துள்ளது.

மேலும் ஒப்பந்த தொழிலாளர்கள் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைத்து விடுமாறு, கார்ப்பரேட் அலுவலகம், மாநில தலைமைப் பொது மேலாளர்களுக்கு சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. சிக்கன நடவடிக்கையை போல தெரிந்தாலும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் மிகப் பெரிய அளவில் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டு வருவதால் நிர்வாகத்தின் இந்த முயற்சி சேவைகளின் தரத்தில் கடுமையான பாதிப்பையே ஏற்படுத்தும்.

இதனை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன், 3.5.2018 அன்று, "கவன ஈர்ப்பு தினம்" அனுசரித்திட முடிவு செய்துள்ளது. அன்றைய தினம், நாடு முழுவதும், கறுப்பு அட்டைகள் அணிந்து, மதிய உணவு இடைவேளையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப் பட வேண்டும்.

கவன ஈர்ப்பு தின கோரிக்கைகள்:

- BSNL பணிகளை வெளியாருக்குக் கொடுப்பதை நிறுத்திடு!
- BSNL நிறுவனத்தின் வீண் செலவுகளை குறைத்திடு!
- பணியில் உள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் மருத்துவ வசதிகளைக் குறைக்காதே!
- ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நீக்கம் செய்யாதே!
- SR. TOA கேடரில் புதிய நியமனங்கள் செய்திடு !

4. தோழர் மோனி போஸ் நினவு கருத்தரங்கம்:-

நவீன தாராள மயக் கொள்கைகளை எதிர்த்தும், நாட்டில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் தொடர்ச்சியான பிரச்சாரங்கள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை மத்திய செயற்குழு கூட்டம் வலியுறுத்தியது. 19.5.2018 அன்று தோழர். மோனி போஸ் அவர்களின் 8- வது நினைவு தினத்தை முன்னிட்டு, மேற்கண்ட இரண்டு தலைப்புகளில், "தோழர். மோனி போஸ் நினைவு சொற்பொழிவுகள்" நடத்திடுமாறு மத்திய செயலகத்தையும், மாநிலச் சங்கங்களையும், மத்திய செயற்குழு கூட்டம் பணித்துள்ளது. இந்த நிகழ்ச்சியை மிக சிறப்பான முறையில் நடத்திட அனைத்து மாநிலச் சங்கங்களும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த சொற்பொழிவுகளை வழங்க முற்போக்கு கருத்துள்ள அறிவுஜீவிகள், பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள் போன்றவர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

5] வீண் செலவுகளைக் கட்டுப் படுத்த ஆலோசனைகள்:-

BSNLஇல் நடைபெறும் வீண் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசர தேவை குறித்து மத்திய செயற்குழு கூட்டம் மிகுந்த கவலையோடு

விவாதித்தது. நிறுவனத்தின் பல்வேறு மட்டங்களில் நடைபெறும் வீண் செலவுகள் குறித்து அனைத்து மாநிலச்செயலாளர்களும், அகில இந்திய நிர்வாகிகளும் மத்திய தலைமையகத்துக்கு ஒரு குறிப்பு வழங்க வேண்டும் என முடிவு எடுக்கப் பட்டது. தலமட்ட குறிப்புகளின் அடிப்படையில், மத்திய தலைமையகம், கார்ப்பரேட் நிர்வாகத்துக்கு இது குறித்து விரிவான அறிக்கை அளிக்கும். 16.4.2018- க்குள் இந்த அறிக்கை அளிக்கப் பட வேண்டும்.

6. இளம் ஊழியர்களுக்கான கருத்தரங்கம் :-

செயலூக்கம் மிகுந்த தொழிற்சங்க இயக்கத்துக்குள் இளம் ஊழியர்களைக் கொண்டு வர வேண்டிய அவசியத்துக்கு மத்திய செயற்குழு கூட்டம் அழுத்தம் கொடுத்து விவாதித்தது. இதனை நடைமுறைப் படுத்த அனைத்து மாநிலச் சங்கங்களும் இளம் ஊழியர் கருத்தரங்கங்களை நடத்த வேண்டும் என முடிவு செய்யப் பட்டது. நேரடி நியமன ஜூனியர் எஞ்ஜீனியர்கள கணிசமான எண்ணிக்கையில் இக்கருத்தரங்கத்திற்கு அழைக்க சிறப்பு கவனம் செலுத்தப் பட வேண்டும். 30.6.2018- க்குள் இக்கருத்தரங்கம் நடத்தப் பட வேண்டும்.

7] மத்திய தலைமையக பகுதிப் பணம் :

இது குறித்து பின்வரும் முடிவுகள் எடுக்கப் பட்டன. மாநிலச் சங்கங்கள் இம்முடிவுகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

அ) 2016 மற்றும் 2017- ஆம் ஆண்டுகளுக்கான, மாவட்ட வாரியான பகுதிப் பண விவரங்களை மாநிலச் சங்கங்கள், மாநில நிர்வாகத்திடமிருந்து பெற்று 30.4.2018-க்குள் மத்திய தலைமையகத்துக்கு அனுப்ப வேண்டும்.

ஆ) சில மாநிலங்களில் புதிய விகிதத்தில் அல்லாமல், பழைய விகிதத்திலேயே சங்கத்திற்கான சந்தாத் தொகை பிடித்தம் செய்யப் படுவதாகத் தெரிய வருகிறது. இது சரியல்ல. இத்தகைய மாநிலச் சங்கங்கள் புதிய விகிதத்தில் சந்தா பிடித்தம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இ) சில மாநிலங்களில், மத்திய தலைமையகத்துக்கான பகுதிப் பணம், மாநிலச் சங்கங்களிடம் வழங்கப் படுவதாகத் தெரிகிறது. இது, பகுதிப் பணம் குறித்த கார்ப்பரேட் அலுவலக உத்தரவுகளை மீறுவதாகும். இத்தகைய மாநிலங்களில், நிர்வாகமே அகில இந்திய சங்கத்துக்கான பகுதிப் பணத்தை அனுப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8] டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஜெயந்தி கொண்டாடுதல் :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிற்பியும், சமூக நீதி காவலருமான டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் பிறந்த நாள் 14.4.2018 அன்று கொண்டாடப் படுகிறது. இதனை சிறந்த வகையில் கொண்டாட மாநில மாவட்டச் சங்கங்கள் அனைத்து தயாரிப்புகளையும் மேற்கொள்ள வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில், பட்டியலின மற்றும் பழங்குடி ஊழியர்களின் பிரச்னைகளைத் தீர்க்க BSNL ஊழியர் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை உரிய முறையில் விளக்கப் பட வேண்டும்.

9] மத்திய செயற்குழு கூட்ட முடிவுகளை அமுலாக்க மத்திய சங்க நிர்வாகிகளுக்கு வேலைப் பங்கீடு :

மத்திய செயற்குழு கூட்ட முடிவுகளை விவாதித்து அமுலாக்க 30.4.2018- க்குள் அனைத்து மாநிலச் சங்கங்களும் மாநில செயற்குழு கூட்டங்களை நடத்த வேண்டும். அதில். முடிவுகளை சிறப்பான முறையில் அமுலாக்க உதவும் வகையில் மத்திய சங்க நிர்வாகிகள், கலந்து கொண்டு வழிகாட்டிட வேண்டும். அதனடிப்படையில் தமிழ் மாநில சங்கத்திற்கு மத்திய சங்கத்தின் அமைப்பு செயலாளர் தோழர் M.விஜயகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களுக்கு தோழர் S.செல்லப்பா AGS நியமிக்கப்பட்டுள்ளார். 30.4.2018-க்குள் மாநிலச் செயற்குழு கூட்டங்களை நடத்துவதோடு, அது குறித்த அறிக்கையை மத்திய தலைமையகத்துக்கு அனுப்ப வேண்டும்.

மிகுந்த அக்கறையுடன் நடைபெற்ற அகர்தலா மத்திய செயற்குழுவை வரவேற்புக்குழுவின் பொது செயலாளரும், மாநில செயலாளருமான ஷிவ்ஜி ரே நன்றி கூறி முடித்து வைத்தார். மத்திய செயற்குழுவின் முடிவுகளை முழுமையாக அமலாக்குவோம்.

■

ஊதிய மாற்றத்தில் இன்றைய நிலை

24.02.2018 அன்று அமைச்சருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தைக்கு பின் BSNLல் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் ஊதிய மாற்றம் தொடர்பான பிரச்சனையை நமது அனைத்திந்திய சங்கம் தொடர்ச்சியாக முயன்று வருகின்றது. அமைச்சருடனான பேச்சு வார்த்தையின் அடிப்படையில் DPEயின் ஒப்புதலுக்காக கோப்பினை DOT அனுப்பியுள்ளது. விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென DPE யில் உள்ள அதிகாரிகளையும் BSNL நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளையும் தொடர்ச்சியாக சந்தித்து விவாதித்தனர்.

தற்போது BSNL ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான ஊதிய மாற்ற பிரச்சனையை மத்திய அமைச்சரவைக்கு கொண்டு செல்ல வேண்டும் என DPE, DOTக்கு 18.04.2018 அன்று கடிதம் எழுதியுள்ளது. எனவே முதற்கட்ட பணிகள் முடிந்துள்ளது. நமது மத்திய சங்கங்கள் அடுத்த கட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக கூர்ந்து கவனித்து வருகின்றன.

முடிவெடுத்தோம்! சாதித்தோம்!!

சபாஷ் தோழர்களே!!!

தமிழகத்தில் "நிலைமைக்கு ஏற்ப செயல்படுவோம்" என அனைத்து சங்கங்களும் 14.03.2018 அன்று அறைகூவல் விட்டன. ஏர்செல்லின் மூடுவிழாவை தொடர்ந்து பொதுமக்கள் மத்தியில் பொதுத்துறை நிறுவனமான BSNL மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கையை பயன்படுத்தி நமது சிம் கார்ட்களின் விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்று நாம் முடிவெடுத்தோம். நிர்வாகமும் நமக்கு வேண்டிய ஒத்துழைப்பை நல்கியது. அதன் அடிப்படையில் மார்ச் மாதத்தில் மட்டும் தமிழகத்தில் 11 லட்சத்திற்கும் மேற்பட்ட சிம்கார்ட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதுவரை எந்த ஒரு மாநிலமும் எந்த காலத்திலும் அடைந்திராத ஒரு இலக்கு. கடந்த நிதியாண்டில் மட்டும் தமிழகத்தில் 28 லட்சத்திற்கும் மேற்பட்ட சிம்கார்ட்களை நாம் விற்பனை செய்துள்ளோம். அகில இந்திய அளவில் விற்பனை செய்யப்பட்ட 40 லட்சம் தொலைபேசிகளில் நாம் இதனை சாதித்துள்ளோம்.

அதே போல அசீம் திட்டத்திலும், CM VAS திட்ட வருவாயிலும் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. EB பிரிவிலும் கார்ப்பரேட் அலுவலக இலக்குகளை தமிழகம் விஞ்சியுள்ளது. 4ஆம் பகுதி வருவாயில் நிர்ணயித்த இலக்கான 175 கோடியை தாண்டி 228.5 கோடி ரூபாய்களை அடைந்துள்ளது. 2000 என இலக்கு நிர்ணயிக்கப்பட்ட LEASED LINEš நாம் 2009 என அடைந்துள்ளோம். அதே நாளில் பழுது நீக்கப்படும் எண்ணிக்கை மார்ச் மாதத்தில் 50 சதவிகிதத்தை தாண்டியுள்ளது. அதே போல றை-கை ாடிவளயீடிவ மற்றும் DSLAM பழுதுகளும் இல்லையென்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தரைவழி தொலைபேசிகளின் எண்ணிக்கை யிலும், BROAD BAND இணைப்புகளிலும் வேலூர் மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது. மொபைல் தொலைபேசிகளின் எண்ணிக்கையில் ஈரோடு மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது. இதற்காக அனைத்து சங்கங்களையும் தமிழ் மாநில நிர்வாகம் பாராட்டி கௌரவித்தது. மாவட்டங்களிலும் நமது தோழர்களை பாராட்டியுள்ளது. உதாரணமாக ஈரோட்டில் தோழர்கள் R.காளிமுத்து, தம்பிக்கலையான், கண்டியண்ணன், கணேசன், கதிர்வேல், E.V.ராஜேந்திரன், மோகன்ராஜ் மற்றும் சண்முக சுந்தரம் ஆகிய தோழர்களை ஈரோடு மாவட்ட நிர்வாகம் மடல் வழங்கி கௌரவித்துள்ளது.

தமிழகத்தின் இந்த சாதனையில் பங்கு பெற்ற தலைமை பொது மேலாளர் உள்ளிட்ட அதிகாரிகளையும், ஊழியர்களையும் மனமார தமிழ் மாநில சங்கம் பாராட்டுகிறது. அத்தனைக்கும் மேலாக தங்களின் மாதாந்திர ஊதியம், பணி பாதுகாப்பு ஆகியவற்றிற்கு சவால்கள் இருந்த போதும் அதனையும் வெற்றி கொண்டு தமிழகத்தின் இந்த சாதனையில் பெரும் பங்காற்றிய ஒப்பந்த தொழிலாளர்களையும் தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது.

நமது பொருளாதார கோரிக்கைகளாக இருந்தாலும் நமது நிறுவனம் காப்பதாக இருந்தாலும், நம்மால் முடியும், நம்மால் மட்டுமே முடியும் என்பதை மீண்டும் நிரூபித்துள்ள அனைவரையும் தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது. ■

மக்களைசந்திப்போம்

24.4.2018 அன்று டெல்லியில் நடைபெற்ற அனைத்து தொழிற்சங்கங்கள் கூட்டத்தில் துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்த்து நடந்து கொண்டிருக்கும் போராட்டங்கள் குறித்து பரிசீலனை செய்யப்பட்டது. BSNL-ஐ கூறுபோடும் நோக்கத்துடன்மத்தியஅரசுதுணைடவர்நிறுவனம் அமைப்பதற்கு எதிராக பொதுமக்கள் ஆதரவைத் திரட்டும் வகையில், நாடு முழுவதும் 7.5.2018 முதல் 11.5.2018 வரை தெருமுனைக்கூட்டங்கள் .நடத்துவதற்கு அனைத்து தொழிற்சங்கங்கள் அறைகூவல் விடுத்தன. அதற்காக அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒருங்கிணைக்கும் தயாரிப்புகளையும் மாநில மாவட்ட சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும். மக்கள் அதிகம் கூடும் ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், சந்தைகள் போன்ற பொது இடங்களில் நடத்த வேண்டும். அவற்றில் பேனர்கள், பிளகார்டுகள் பயன் படுத்த வேண்டும்.

குற்றவாளி பிடிபட்டான்

ஹரியானா மாநிலத்தில் ஃபரிதாபாதில் PGM ஆக பணி புரியும் ஆதேஷ் குமார் குப்தா, கமல் மேவானி AGM, ஷங்கர் வர்மா, JTO ஆகிய இரண்டு அதிகாரிகளுடன் ஒரு லஞ்ச ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். நமது சங்கத்தின் காசியாபாத் மாவட்டச் செயலாளர் சுகேந்திரபால் சிங்கின் கொலை வழக்கில் அவர் தொடர்புடையவர் என்பதை நினைவூட்டுகிறோம். தற்போது, ரூ. 7,99,877 மதிப்புள்ள ஒப்பந்தகாரர் பில்களை ஒப்புதல் அளிப்பதற்கு ரூ.51000 லஞ்சம் கேட்டதாக உள்ள வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். நொய்டாவில் GM ஆக பணிபுரிந்த போதும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார். இத்தனை குற்றங்கள் செய்தும் "பெரியஇடங்களில்' அவர் கொண்டிருந்த செல்வாக்கு மூலம் தான் PGM ஆக பதவி உயர்வு பெற்றுள்ளார் என்பது தெரிகிறது.

GM(ESTT)யுடன் பேச்சு வார்த்தை.

திரு.சௌரப் தியாகி GM(ESTT) அவர்களை 16.4.2018 பொதுச் செயலாளர் தோழர்.பி.அபிமன்யு அவர்கள் சந்தித்து பின் வரும் பிரச்னைகளை விவாதித்தார். திரு ஷியோ சங்கர் பிரசாத் DGM மற்றும் திரு.ஏ.கே.சிங் DGM ஆகியோரும் விவாதத்தில் உடனிருந்தனர்.

1) ஊழியர் வருங்கால வைப்பு நிதியில், 1.10.2000 –க்கு முன்னர் நியமனம் பெற்று அந்த தேதிக்குப்பின்னர் பணியில்சேர்ந்த ஊழியர்களுக்கு சட்ட விரோதமாக பாக்கித் தொகை பிடித்தம் செய்வதை நிறுத்துதல். மத்திய பிரதேசத்தில் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நிர்வாகம் தெரிவித்தது. தெலுங்கானா மாநிலத்தின் விவரம் பெற்று மேலும் விவாதிக்கப்படும்.

2) அனாமலி : DOT–க்கு தேவையான விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளதாக நிர்வாகம் தெரிவித்தது. DOT –யுடன் மேலும் இது குறித்து நமது சங்கம் நடவடிக்கை எடுக்கும்.

3) சீனியர்அக்கவுண்டண்ட்ஊழியர்களுக்கு, 'பி' பிரிவு அந்தஸ்து : ரூ.7830 ஊதிய விகிதம் அளிக்க ஏற்கனவே நிர்வாகம் பரிந்துரைத்துள்ளது. நீதிமன்ற தடை விலக்கப்பட்டால்தான் கார்ப்பரேட் அலுவலகம் இறுதி நடவடிக்கை எடுக்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) டெலிகாம் டெக்னீஷியன் இலாகா தேர்வு 10-ஆம் வகுப்பு தகுதிக்கு ஒரு முறை தளர்வு அளித்தல்- இதனை ஏற்றுக் கொள்ள நிர்வாகம் தயங்குகிறது. இயக்குநர் (மனிதவளம்) அவர்களுடன் மேலும் விவாதிக்கப்படும்.

SR. TOA கேடரில் 7100 ஊதிய விகிதம் 6550 ஆகக் குறைக்கப்பட்டதை சரி செய்தல் – பாதிக்கப்பட்ட ஊழியர்கள் குறித்து நிர்வாகம் பரிவைத் தெரிவித்தாலும், புதிய பதவி உயர்வு

திட்டத்தில்திருத்தம்செய்தபிறகேஇதனைத்தீர்க்க இயலும்; திருத்தம் செய்ய BSNL போர்டின் ஒப்புதல் தேவை: தற்போது அதற்கான வாய்ப்பில்லை என நிர்வாகம் தெரிவித்தது. BSNL போர்டின் ஒப்புதல் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நமது சங்கம் வலியுறுத்தியுள்ளது.

முடிவுகளை அமுல்படுத்துக

15.2.2018 அன்று நடைபெற்ற பதவி பெயர் மாற்ற குழுவின் முடிவுகளை அமுல்படுத்துமாறு திரு.அஷ்ஓதோஷ் குப்தா GM (RESTG) அவர்களை 13.4.2018 அன்று நமது பொதுச் செயலாளர் தோழர்.பி.அபிமன்யு சந்தித்து வலியுறுத்தினார். இம் முடிவுகள் நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும், அடுத்த கூட்டத்தில் ஒப்புதல் அளிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்க தொகை

2015-16 ஆம் ஆண்டு அளிக்கப்பட வேண்டிய உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை குறித்த கூட்டுக்குழு கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு திரு.அஷ்ஓதோஷ்குப்தா GM (RESTG) அவர்களை 13.4.2018 அன்று நமது பொதுச்செயலாளர். தோழர் பி.அபிமன்யு சந்தித்து வலியுறுத்தினார். விரைவில் கூட்டப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

தேசிய குழு கூட்டம்

16.4.2018 அன்று நடைபெறவிருந்த 36- வது தேசீய கவுன்சில் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. அதனை உடனடியாக நடத்துமாறு நமது பொதுச் செயலாளர் தோழர்..பி.அபிமன்யு 13.4.2018 அன்று, திரு.ஏ.எம்.குப்தா GM (SR) அவர்களை சந்தித்து, வலியுறுத்தினார் .ஏப்ரல் மாதத்துக்குள் நடத்தும் வாய்ப்பில்லை என்ற கருத்தைGM (SR) தெரிவித்துள்ளார்.

ஆலோசனைகளை வரவேற்கின்றோம்

BSNL நிறுவனத்தின் செலவினங்களை குறைக்கும் நோக்கத்துடன் நிர்வாகம் ஊழியர்களின் சலுகைகளை பறிக்கிறது. DIRECTOR(HR) அவர்களை 28.03.2018 அன்று நமது பொது செயலாளர் சந்தித்த போது இதன் மீதான தனது வருத்தத்தை பதிவு செய்ததோடு, அனைத்து சங்கங்களின் கூட்டம் ஒன்று நடத்தி தேவையற்ற செலவினங்களை குறைப்பதற்கான ஆலோசனைகளை கேட்க வேண்டும் என்றும் அதுவே செலவினங்களை குறைப்பதற்கான வழிகளை கண்டு பிடிக்க உதவும் என்றும் தெரிவித்தார். இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்ட DIRECTOR HR, அத்தகைய ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்யும் படி திரு யஷ்வந் நாத்சிங் GM|(BFCI) அவர்களுக்கு வழிகாட்டினார். அந்தக் கூட்டம் 09.05.2018 அன்று நடைபெற உள்ளது. எனவே விருப்பமுள்ள எந்த ஒரு தோழரும் தன்னுடைய கருத்துக்களை மத்திய சங்கத்திற்கு bsnleuchq@gamil.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிட வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

தேவையில்லை CHECK OFF முறை

அடுத்த உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலை CHECK OFF முறையில் நடத்துவது என கார்ப்பரேட் அலுவலகத்தின் SR பிரிவு கொடுத்திருக்கும் முன்மொழிவு தொடர்பாக BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் DIRECTOR (HR) திருமிகு சுஜாதா ரே அவர்களை 28.03.2018 அன்று சந்தித்து விவாதித்தார். CHECK OFF முறை தேவையற்ற முறைகேடுகளையும், தில்லுமுல்லுகளுக்கும் வழிவகுத்து BSNLல் தேவையற்ற சூழலை உருவாக்கிவிடும் என்று எடுத்துரைத்த நமது பொது செயலாளர் அடுத்த உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலும், ரகசிய வாக்கெடுப்பு முறையிலேயே நடைபெற வேண்டும் என கேட்டுக் கொண்டார். அதற்கான நமது சங்கத்தின் கடிதத்தையும் வழங்கினார். இதனை பொறுமையாக கேட்டுக் கொண்ட DIRECTOR (HR) நமது சங்கத்தின் கருத்துக்களை கணக்கில் கொள்வதாக உறுதி அளித்தார். ■

சரித்திர சாதனை - 20.05.2009

தமிழகத்தின் BSNLல் பணி புரியும் ஒப்பந்த தொழிலாளர்களின் தினச்சம்பளம் ரூ.30 என்கிற கொடுமையான நிலைமை இருந்தது. தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கமும், TNTCWUவும் உரிய சம்பளம் பெறுவதற்கு பல விதமான போராட்டங்களை மாவட்ட, மாநில மட்டங்களில் நடத்தின. இரு மாநில சங்கங்களின் சார்பாக ஒப்பந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதிய வழங்க வேண்டும் என Dy.CLC முன்பு 25.06.2005 அன்று ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. பல்வேறு கட்ட விசாரணைகளுக்கு பின்னர் நம்முடைய வலுவான வாதங்களின் அடிப்படையில் House Keeping பணி புரியும் தோழர்களுக்கு ரூ.140/-ம் Cleaning பணி புரியும் தோழர்களுக்கு ரூ.120/-ம் வழங்க வேண்டும் என Dy.CLC அவர்கள் 28.01.2008 அன்று தீர்ப்பு வழங்கினார். நிர்வாகம் அதனை அமல்படுத்தாமல் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. அங்கும் நமக்கு சாதகமான தீர்ப்பே கிடைத்தது. மீண்டும் நிர்வாகம் அமர்வு நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்தது.

இதற்கு இடையில் டெல்லி தொழிலாளர் நல அமைச்சகத்தில் உள்ள CLC அவர்கள் BSNLல் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ரூ120/-, ரூ.150/- மற்றும் ரூ.180/- வழங்க வேண்டும் என 20.05.2009ல் ஒரு உத்தரவு வெளியிட்டார். BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய சங்கத்தின் முயற்சியால் இந்த உத்தரவை நாடு முழுவதும் அமலாக்க வேண்டும் என கார்ப்பரேட் அலுவலகம் 06.05.2010ல் உத்தரவு வெளியிட்டது. இந்த உத்தரவை தமிழகத்தில் 20.05.2009 முதல் அமலாக்க வேண்டும் என சென்னை அமர்வு நீதிமன்றம் நமக்கு சாதகமான தீர்ப்பையே 27.03.2015 அன்று வழங்கியது. அதன் அடிப்படையில் 20.05.2009 முதல் ஒப்பந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் என்பது உறுதி செய்யப்பட்டது.

அதனை தமிழகத்தில் அமலாக்க தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கமும், TNTCWUவும் தொடர்ந்து நிர்வாகத்தை வலியுறுத்தி வந்தது. இதற்காக பல கட்ட போராட்டங்களும் நடத்தப்பட்டன. இறுதியில் தமிழ் மாநில நிர்வாகம் 20.05.2009 முதல் தமிழகத்தில் பணி புரிந்து வந்த ஒப்பந்த ஊழியர்களுக்கு நிலுவைத் தொகை வழங்க உத்தரவு வெளியிட்டு விட்டது.

சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி கொடுக்க மாட்டேன் என்கின்ற சொலவடையை போல மாவட்ட நிர்வாகங்கள் அதனை அமலாக்க மறுத்து வருகின்றன. கேள்விக்கு மேல் கேள்வி, சந்தேகத்திற்கு மேல் சந்தேகம். அப்பப்பா! இதையெல்லாம் தாண்டி தற்போது இரண்டு மாவட்டங்களில் இந்த உத்தரவு முழுமையாக அமலாகி உள்ளது.

கோவையில் ஒரு சிறு பகுதியினருக்கு மட்டும் நிலுவைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. பாண்டிச்சேரி மாவட்டத்தில் மொத்தம் 72 ஒப்பந்த ஊழியர்களுக்கு 14 லட்ச ரூபாய் நிலுவைத் தொகை வழங்கப்பட்டு விட்டது. அதிகபட்சமாக ஒரு ஊழியருக்கு ரூ.16,500/- கிடைத்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 179 ஒப்பந்த ஊழியர்களுக்கு 15,15,185 ரூபாய் நிலுவைத் தொகை வழங்கப்பட்டு விட்டது. அதிகபட்சமாக ஒரு ஊழியருக்கு ரூ10,500/- கிடைத்துள்ளது.

ஒப்பந்த ஊழியர்களுக்கும் நிலுவைத்தொகை உண்டு என நிரூபித்து தொழிற்சங்க வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கமும் TNTCWUவும் படைத்துள்ளன.

ஒப்பந்த ஊழியருக்கும் போராடி நியாயத்தை பெற்றுத் தந்த அகில இந்திய BSNL ஊழியர் சங்கத்திற்கும், நீதிமன்றங்களில் திறமையாக வாதாடி சாதகமான தீர்ப்பை பெற்றுத் தந்த வழக்கறிஞர்களுக்கும், மாநில சங்கங்களின் நிர்பந்தத்தின் நியாயத்தை உணர்ந்து மாவட்ட நிர்வாகங்களுக்கு பல உத்தரவுகளை போட்ட மாநில நிர்வாகத்திற்கும், தல மட்டத்தில் போராடி பெற்றுக் கொடுத்த மாவட்ட சங்கங்களுக்கும் தமிழ் மாநில சங்கத்தின் வாழ்த்துக்கள். மற்ற மாவட்டங்களும் நிலுவைத் தொகை விரைவில் பெற உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது. ■

ஒப்பந்த ஊழியர்களின் வேலை நீக்கத்தை தடுத்து நிறுத்திய தூத்துக்குடி

அதிகார வர்க்கத்தின் தவறான புரிதலுக்கு ஒப்பந்த ஊழியர்களை பலிகடாவாக மாற்றிய தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தை எதிர்த்து வீரம் செறிந்த ஒன்று பட்ட போராட்டத்தை தூத்துக்குடி மாவட்ட தோழர்கள் நடத்தி வெற்றி கண்டுள்ளனர்.

BSNLன் செலவினத்தை குறைக்க ஒப்பந்த ஊழியர்களை பணி நீக்கம் செய்வது ஒன்று தான் வழி என கார்ப்பரேட் நிர்வாகம் நினைத்து தமிழகத்தில் உள்ள ஒப்பந்த ஊழியர்களை குறைக்க வேண்டும் என உத்தரவிட்டதும், தமிழ் மாநில BSNLEU, TNTCWU, NFTE மற்றும் TMTCLU ஆகிய சங்கங்கள் ஒன்றாக மாநில நிர்வாகத்தை சந்தித்து விவாதித்ததின் அடிப்படையில் 01.10.2017க்கு முன் பணிக்கு வந்து 60 வயது நிறைவு பெறாத எந்த ஒரு தோழரையும் பணி நீக்கம் செய்வதில்லை என நிர்வாகத்துடன் ஒரு முடிவு ஏற்பட்டது. ஆனால் தூத்துக்குடி உள்ளிட்ட ஒரு சில மாவட்ட நிர்வாகங்களுக்கு இதில் தேவையில்லாத குழப்பம் ஏற்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் 01.04.2018 முதல் 44 ஒப்பந்த ஊழியர்களை வேலை நீக்கம் செய்வதற்கான உத்தரவை 21.03.2018 அன்று வெளியிட்டது. இதனை திரும்ப பெற வேண்டும் என தூத்துக்குடி மாவட்ட BSNL ஊழியர் சங்கம் பலமுறை நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியது. ஆனால் பயன் ஏதும் இல்லை. எனவே இதனை எதிர்த்து போராடுவது என தூத்துக்குடி மாவட்ட BSNLEU மற்றும் TNTCWU சங்கங்கள் முடிவெடுத்தன. NFTE சங்கமும் இந்த போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டது பாராட்டத்தக்கது.

மூன்று சங்கங்களும் இணைந்து 22.03.2018 அன்று அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டமும் 24.03.2018 அன்று சுமார் 200 தோழர்கள் பங்குபெற்ற பெருந்திரள் தர்ணா போராட்டமும் நடத்தினர். TNTCWU மாநில செயலாளர் தோழர் C.வினோத்குமார் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டார்.

26.03.2018 காலை 10.00 மணி முதல் மாவட்டம் முழுவதும் இருந்து திரண்ட 200க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்ற காத்திருப்பு போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. BSNLEU மாநில அமைப்புச் செயலர் தோழர் கிறிஸ்டோபர், BSNL CCWF அகில இந்திய உதவிச் செயலர் தோழர் சி. பழனிச்சாமி ஆகியோர் இப்போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

BSNLEU மற்றும் NFTE மாநில சங்க தலைவர்கள் மாநில நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தினர். பிரச்சனைக்கு தீர்வு காணத காரணத்தால் காத்திருப்பு போராட்டம் இரவிலும் தொடர்ந்தது. அனைத்து வாடிக்கையாளர் சேவை மையங்களும் வெறிச்சோடியது. வேலைகள் ஸ்தம்பித்தன. 27.03.2018 அன்று தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் மாநில தலைமை பொது மேலாளரை சந்தித்து இது தொடர்பாக விவாதித்தது. தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் இருந்து தூத்துக்குடி பொதுமேலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. 27.03.2018 அன்று மதியத்திற்கு மேல் பொது மேலாளருடன் இரண்டு சுற்று பேச்சு வார்த்தை நடைபெற்றது. இறுதியில் 44 ஒப்பந்த தொழிலாளர்களை பணி நீக்கம் செய்து போடப்பட்ட உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டது.

ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையில் உறுதியாக தலைமை ஏற்று போராடிய தூத்துக்குடி மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தையும் TNTCWU சங்கத்தையும் நிரந்தர மற்றும் ஒப்பந்த ஊழியர்களையும், நம்மோடு உறுதியாக நின்றிருந்த NFTE சங்கத்தையும் தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது.

பிரச்சனையின் தீர்வுக்கு தலையிட்டு உதவிய DGM(A), GM(HR) மற்றும் CGM உள்ளிட்ட அனைவருக்கும் தமிழ் மாநில சங்கம் தனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் உரித்தாக்கிக் கொள்கிறது. ■

கடலூர் கருத்தரங்கம்

BSNL நேரடி நியமனம் பெற்ற ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கான EPF கருத்தரங்கம் 08.04.2018 அன்று கடலூர் தொலை பேசி நிலையத்தில் மாவட்ட தலைவர் தோழர்.P. ரத்தினம் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது உதவி பொதுமேலாளர் திருமதி. கலைவானி அவர்கள் கருத்தரங்கத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட செயலர் தோழர் K.T. சம்பந்தம் அவர்கள் அறிமுக உரையாற்றினார் சிறப்புரை நிகழ்த்திய நமது துணைப்பொதுமேலாளர். திருமதி. N.ஜெயந்தி அபர்ணா அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மிகவும் பயனளிக்க கூடிய இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நமது மாவட்டசெயலரை பாராட்டினார்.மேலும் ஒப்பந்த தொழிலாளர்களக்கு EPF முறைபடுத்துவதற்காக நிர்வாகம் மேற்கொண்ட முயற்சிகளையும் அதற்கு உதாரனமாக தாமே EPF கட்டாத இரண்டு ஒப்பந்த நிறுவனத்தை தகுதி நீக்கம் செய்ததை (Black list) நினைவு கூர்ந்தார்.

EPF அலுவலகத்தின் சார்பாக கலந்து கொண்ட சட்ட அமலாக்க அதிகாரி திரு. P .சுப்பையா அவர்கள் EPF. சட்ட திட்டங்கள் பற்றியும் அதில் தொழிலாளர்களுக்கு உள்ள பயன்கள் அதனை பெறும் முறைகள் அமுல்படுத்துவதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்களை சரி செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவற்றை மிக அற்புதமாக எடுத்து கூறினார். EPF கமிஷனர் திரு. கௌரவ் கார்க் அவர்கள் பேசும் போது மத்திய அரசின் புதிய EPF திட்டங்கள் பற்றியும் EPF ல் கொண்டு வரப்பட்டுள்ள சேவைகளை பற்றியும் அதனை செயல்படுத்தும் வழிமுறைகள் ஆகியவற்றை சுட்டிக்காட்டியதோடு ஒவ்வொரு மாதமும் 10 ம் தேதி EPF பயனாளிகள் குறைகேட்பு கூட்டம் கடலூர் EPF அலுவலகத்தில் நடைபெற்று வறுகிறது எனவும் BSNL ஒப்பந்த தொழிலாளர்களும் தங்கள் பிரச்சனைகளை முறையிட்டு தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார் கூட்டத்திற்கு மாவட்ட முழுவதிலுமிருந்து சுமார் 150க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டது குறிப்பிட்த்தக்கது. நிகழ்ச்சியை மிக சிறப்பாக ஏற்பாடு செய்த கடலூர் மாவட்டச் சங்கத்தை மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது. ■

ஸ்டெர்லைட் ஆலையை மூடுக

குஜராத், கோவா, மகராஷ்டிரா மாநிலங்களில் விரட்டி அடிக்கப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையை வேதனந்தா குழுமம் என்ற கார்பொரேட் நிறுவனம் தூத்துக்குடி மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி 1994 ஆம் ஆண்டு அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.. 1996ல் தாமிரம் உற்பத்தி செய்ய அனுமதியும் பெற்றது.

ஸ்டெர்லைட் ஆலையில் தாமிரம் உற்பத்தி செய்யும் போது சல்பர்டை ஆக்ஸைடு, ஆர்சின் போன்ற வாயுக்களும் வெளியேறுகின்றன. இது காற்றில் கலந்து மனிதர்கள், விலங்குகள் சுவாசிக்கும் போது நுரையீரலில் தங்குகின்றன. மேலும் சுவாசக் கோளாறு, கண் எரிச்சல், தொண்டைவலி, தோல் வியாதி, புற்றுநோய் போன்ற கொடிய நோய்களை ஏற்படுத்துகின்றன. இவை நீரையும், நிலத்தையும் மாசுபடுத்துகின்றன.ஒரு டன் தாமிரம் உற்பத்தி செய்தால் 3 டன் கருப்பு மண் (ஸ்லாக்) திடக் கழிவாக வெளியாகிறது இது பல்வேறு கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. எல்லா கார்பொரேட் நிறுவனங்களையும் போல் ஸ்டெர்லைட் ஆலையும் எப்பொழுதும் விதிமுறைகளை ஏற்று செயல்பட்டது இல்லை. குடி நீருக்கும் விவசாயத்திற்கும் ஆதாரமான தாமிரபரணி தண்ணீரைமிக குறைந்த விலைக்கு கொடுக்கப்படுகிறது. அது மட்டுமல்ல ஸ்டெர்லைட் நிறுவனம் பல ஆயிரம் கோடி வரி ஏய்ப்பு செய்துள்ளது.

இருக்கிற இந்த ஸ்டெர்லைட் ஆலையால் இவ்வளவு பாதிப்புக்கள் இருக்கும் போதே 4 மடங்கு விரிவாக்கம் செய்வதற்கு மத்திய, மாநில அரசுகளின் அனுமதியைப் பெற்றுஸ்டெர்லைட் நிறுவனம் வேலையை துவக்கியுள்ளது. ஆலை விரிவாக்கம் என்பதுதூத்துக்குடி மாநகர் மற்றும் ஆலையை சுற்றியுள்ள கிராம மக்களிடம் கடும் அதிருப்தியையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஸ்டெர்லைட் ஆலையை முடுக, என்று தூத்துக்குடி நகர மக்களும் ஆலையை சுற்றியுள்ள கிராம பகுதி மக்களும் வீராவேசமாக போராட்டம் நடத்தி வருகின்றனர். கடையடைப்பு, முற்றுகைப்போராட்டம், பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் கண்டனக் கூட்டம் என்று போராட்டம் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நாமும் அவர்களுடன் இணைந்து அவர்கள் கோரிக்கைகளுக்காக குரல் கொடுப்போம். நமது தாய் நாட்டை கார்போரேட் நிறுவனங்களின் வேட்டைக்காடாக மாற்றிட அனுமதியோம்

இணைந்த கருத்தரங்கத்தின் பிரகடனம்

அனைத்து மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் செயல்படும் மத்திய சங்கங்களின் இணைந்த தேசிய கருத்தரங்கம் 08 04 2018 அன்று கேரளமாநிலம் எர்ணாகுளம் நகரில் நடைபெற்றது. இதில் நாடு முழுவதிலுமிருந்து INTUC AITUC HMS CITU LPF மற்றும் பெங்களூரு, ஹைதராபாத நகரில் இயங்கும் பொதுத்துறை சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து 350 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அதில். பொதுத்துறை நிறுவனங்களின் மீதும் அதன் ஊழியர்கள் மீதும் மோடி தலைமையில் செயல்படும் பாஜக அரசு கட்டவிழ்த்துள்ள பல்வேறு விரோத நடவடிக்கைகளையும் செயல்களையும் ஆழ்ந்தகவலையுடன் பரிசீலித்தது. சங்கங்களின் சார்பாக வெளியிடப்பட்டிருந்த அறிக்கையின் மீது 30 பிரதிநிதிகள் தங்களுடைய விவாதங்கள் மூலம் கருத்துக்களை முன் வைத்தனர்.

நாடு முழுவதும் உள்ள தொழிற் சங்கங்களின் எதிர்ப்பையும் மீறி கார்ப்போரேட் நிறுவனங்களின் ஆதரவு நடவடிக்கையில் மத்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருகின்றது. சமீபத்தில் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள குறிப்பிட்ட காலத்திற்கான வேலை (FIXED TERM EMPLOYMENT) என்ற காட்டுமிராண்டித்தனமான உத்தரவு உழைக்கும் மக்களை அடிமைகளாக உருவாக்கிடும். இந்த மோசமான உத்தரவை எதிர்த்து கேரள மாநிலத்தில் உள்ள அனைத்து மத்திய / மாநில தொழிற்சங்கங்களும் 02 04 2018 அன்று வெற்றிகரமாக நடத்தியவேலை நிறுத்தப் போராட்டத்திற்கு இக்கருத்தரங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது

தனியார் மயம், முற்றிலுமாக பொதுத்துறை நிறுவன பங்கு விற்பனை, பொதுத்துறை நிறுவனங்களை மூடுதல், அசையும் மற்றும் அசையாத சொத்துக்களை சூறையாடுதல் என்பதை தாரகமந்திரமாக ஏற்றுக்கொண்டு மோடி அரசு செயல்படுத்திக்கொண்டிருக்கின்றது. பாதுகாப்பு துறையில் உற்பத்தி, நிலக்கரி, ஆயில், மின்சக்தி, அனத்துப்பகுதிபோக்குவரத்து (ரயில், ஆகாயம், நீர்வழி) தொலைதொடர்பு, வங்கி, காப்பீட்டுத்துறை எனஅனைத்து கேந்திரமான பகுதிகள் மீதும் தனியார் மயம் என்ற தாக்குதலில் மோடிஅரசு இறங்கியுள்ளது. அதற்கு Nithi Ayog DIPAM, ETF போன்றவைகளை ஆயுதங்களாக பயன்படுத்திக் கொள்கின்றது.

சதீஸ் சந்திரா கமிட்டி, பொதுத்துறை நிறுவனங்களில் 8 ஆவது சம்பள மாற்றத்திற்கான தன்னுடைய பரிந்துரையில் குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தின் வழங்கும் திறன் (AFFORDABLITY) என்ற ஒரு தேவையற்ற நிபந்தனையை புகுத்தியுள்ளது மேலும் ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பும் 3 ஆண்டுகளுக்கு முறை நிறுவனத்தின் வழங்கும் திறனை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையும் சேர்த்துள்ளது இதன் அடிப்படையில் பொதுத்துறைக்கான இலாக்கா பேச்சு வார்த்தைக்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. சம்பள ஒப்பந்த காலம் 10 ஆண்டுகளாக மாற்றுவதற்கு அரசு புறவாசல் வழியாக தொழிற்சங்கங்களை நிர்ப்பந்திக்கின்றது. 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறு ஆய்வு என்ற நிபந்தனையின் காரணமாக புதிய ஒப்பந்தம் மூலம் வாங்கும் சம்பளமும் குறைவதற்கான சாத்தியமும் ஏற்படுகின்றது.

எனவே இணைந்த கருத்தரங்கம் கீழ்க்கண்ட கோரிக்கைகளுக்கான ஒன்றிணைந்த பிரச்சாரமும் போராட்டங்களும் அகில இந்திய அளவில் மேற்கொள்வதென ஒருமனதாக முடிவு செய்துள்ளது.

1. பொதுத்துறைகளை தனியார்மயப் படுத்துதலை நிறுத்து
2. பொதுத்துறை நிறுவன பங்குகளை விற்பனை செய்யாதே
3. குறிப்பிட்ட காலத்திற்கான பணி (FISD TERM EMPLOYMENT) என்ற பாதகமான உத்ததரவை ரத்து செய்
4. சம்பள ஒப்பந்தத்திற்கு வழங்கும் திறன் என்ற நிபந்தனையை அகற்று
5. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கும் திறன் அடிப்படையில் மறு ஆய்வு செய்வதையும் நீக்கிடு

திட்டமிட்டுள்ள இயக்கங்கள்

1. எல்லா பொதுத்துறை நிறுவனங்களிலும் மே 7 முதல் 11 வரை ஒருவார கால பிரச்சார இயக்கம்
2. மே 11 அன்று பிரதமர் மற்றும் கனரக மற்றும் பொதுதுறை நிறுவனங்களுக்கான அமைச்சருக்கும் FAX அனுப்புதல்
3. மே 25 அன்று தலைநகர் புது டெல்லியில் அனைத்து தொழிற்சங்களும் இணைந்த மாபெரும் கருத்தரங்க நடத்துவது
4. கருத்தரங்கத்தில் அடுத்த கட்ட போராட்ட நடவடிக்கைகளை முடிவு செய்தல்

தோழர்களே நமது பகுதியிலும் மேற்கண்ட முடிவுகளை சிறப்பபாக நடத்திட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ■

கலங்கப்படும் கல்விச் சாலைகள்

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை கல்லூரி கணித பேராசிரியர் நிர்மலா தேவி என்பவர் தன்னுடைய மாணவிகளிடம் நடத்திய உரையாடல் பதிவுகள் வெளியாகி பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது. ஏழ்மையான நிலையில் உள்ள அந்த மாணவிகளிடம் ஆசை வார்த்தைகளை கூறி தவறான செயலில் ஈடுபட அவர் நிர்ப்பந்தம் செய்வது அந்த உரையாடலில் பதிவாகியுள்ளது. பெரும் புள்ளிகளின் பாலியல் இச்சைக்கு மாணவிகளை பலியாக்க அந்த பேராசிரியர் முயல்வது உரையாடல் மூலம் தெளிவாகிறது.

நிர்மலாதேவி மாணவிகளோடு நடத்திய உரையாடலை பார்க்கும்போது இது ஒரு மிகப்பெரிய வலைப்பின்னலாக செயல்பட்டு வருவதை அறிய முடிகிறது. ஆளுநர் பெயர் உட்பட அந்த உரையாடலில் அடிபடுகிறது.

இந்த விசயம் மிகமிக தீவிரமானதாகும். ஒட்டுமொத்த குற்றத்தையும் நிர்மலாதேவி மீது சுமத்துவது பிரச்சனையை எளிதாக முடிக்கஉதவும். ஆனால் அது முழுமையாக இருக்காது. யாருடைய பாலியல் இச்சையை தீர்க்க மாணவிகளை சீரழிக்கும் வேலையில் இவர் ஈடுபட்டார் என்ற உண்மை முழுமையாக வெளிவந்தாக வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன்பு நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

உயர்கல்வி நிறுவனங்களில் பாலியல் அத்துமீறல்கள் நடந்துவருவது குறித்து அவ்வப்போது அதிர்ச்சியளிக்கும் தகவல்கள் வெளியாகின்றன. வெளிவந்ததை விட வெளியே தெரியாமல் அமுக்கப்பட்டதுதான் அதிகம். ஆய்வுப்பணி மேற்கொள்ளும் மாணவிகள் இத்தகைய மிரட்டலுக்கு ஆளாகின்றனர். வெளியில் சொன்னால் எதிர்காலமே பாழாகி விடும் என அவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்.

இன்றைக்கு உயர்கல்வி நிறுவனங்களில் பணம் கொடுக்காமல் எந்த பதவியும் பெற முடியாது என்ற நிலை உருவாக்கப்பட்டு விட்டது.துணைவேந்தர் பதவி முதல் விரிவுரையாளர் பதவி வரை பட்டியல் போட்டு ஒட்டாத குறைதான். அதிகாரத்தில் உள்ள அனைவருக்கும்இதில் பங்கு இருப்பதாக பகிரங்கமாகவே பேசப்படுகிறது. சாதி மத வெறியும், ஒடுக்குமுறையும் கூட உயர்கல்வி நிறுவனங்களில் நிலவுகிறது. நிர்மலா தேவியின் உரையாடலை கவனிக்கும் போது எந்தளவுக்கு உயர்கல்வி நிறுவனங்கள் சீரழிவின் எல்லைக்கு சென்றுள்ளன என்று புரிந்து கொள்ள முடிகிறது.

இதுஒரு தனித்த சம்பவம் அல்ல. நாடு முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அக்கிரமத்திற்கு ஒரு சாட்சியம் மட்டுமே.முறையான பாரபட்சமற்றவிசாரணை நடைபெறவேண்டும்இந்த விவகாரத்தில் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மாணவ பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும். புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உயர்கல்விக்கு சென்றாலும் கூட பெண்கள் பாலியல் ரீதியாக கொடுமைப்படுத்தப்படுவது குறித்து இந்த தேசம் அவமானப்பட வேண்டும். ■

வெற்று கோஷமல்ல நடைமுறையே நோக்கம்

பாடுபடும் தொழிலாளிக்கு ஜாதி இல்லை ! மதம் இல்லை !
என்ற கோஷத்தை நெடுங்காலமாக கேட்டு வருகிறோம். அதை வெறும் சம்பிரதாயமாக இல்லாமல் நடைமுறைப்படுத்துவது என்பது ஒரு கடினமான காரியம் போல் தெரிந்தாலும் அதை செய்து காட்டியிருக்கின்றார்கள் அருகில் உள்ள கேரள உழைக்கும் மக்கள்.

நூறு ஆண்டுளுக்கு முன்னர் கேரளா என்றாலே ஜாதீய பிரிவினை! ஜாதீய கொடுமை! கடும் ஒடுக்கும் முறை! சொல்ல முடியாத அளவு தலைவிரித்தாடியது. கேரளத்திற்கு சென்றிருந்த சுவாமி விவேகானந்தர் அவர்கள் இதைப் பார்த்துவிட்டு. கேரளா மனநோய் பிடித்தவர்களின் நாடு என்று வர்ணனை செய்தார்.

நூறு ஆண்டு கால போராட்டத்திற்குப் பின்னர், அந்த கேரள தேசத்து மக்கள் அதை மாற்றியமைத்து வரலாற்றுப் புரட்சி செய்துள்ளனர்.

ஆம் ! கல்விக்கூடங்களில் சுமார் 1,24,000 குழந்தைகள் தாங்கள் எந்த சாதியையும் மதத்தையும் சார்ந்தவர்கள் அல்ல என்று பதிவு செய்துள்ளனர். அவர்களுடைய தாய் தந்தையரை இந்த எண்ணிக்கையில் சேர்க்க வில்லை. பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையே இத்தனை லட்சம் என்றால் பதிவு செய்யாதவர்கள் எண்ணிக்கை இன்னும் இருக்கின்றது.

ஆக கேரளாவில் ஜாதியாற்றவர்களின் மதமற்றவர்களின் எண்ணிக்கை பெருமளவில் ஏற்பட்டுள்ளது. வருங்காலங்களி இன்னும் அதிகரிக்கும்

இது எப்படி சாத்தியமானது ?

யாரால் வந்தது ?

எந்த கொள்கையினால் இந்த மாற்றம் ஏற்பட்டது ?

தோழர்களின் சிந்தனைக்கே விட்டு விடுகின்றோம்.

அனைத்து கோஷங்களும் நடைமுறையாகும் காலம் விரைவில் வரும் !. ■

பணி ஓய்வு

தோழர் **K.அழகு ராஜ்** TT சிவகாசி

தோழர் K. அழகுராஜ் அவர்கள் சிவகாசியில் TT ஆக பணி புரிந்து கடந்த 31-1 - 18 அன்று பணி நிறைவு செய்தார். அவர் சிவகாசி கிளைத் தலைவராக பல காலம் பணியாற்றியவர் .அவர் தனது பணி நிறைவை ஒட்டி மாநில, மாவட்ட , கிளை சங்கங்களுக்கு தலா 500 ரூபாய் நன்கொடை வழங்கி உள்ளார்

தோழர் **S. செல்வராஜ்** OS (P)
திருவில்லிபுத்தூர்

தோழர் S.செல்வராஜ் அவர்கள் திருவில்லிபுத்தூரில் OS(P) ஆக பணிபுரிந்து கடந்த 28.02.2018 அன்று பணி ஓய்வு பெற்றார் .நமது சங்க செயல்பாட்டை புரிந்து கொண்டு NFTE சங்கத்தில் இருந்து நமது சங்கத்தில் இணைந்தவர். இவர் தனது பணி நிறைவை முன்னிட்டு ரூபாய் 500ஐ மாநில சங்க நன்கொடையாக வழங்கி உள்ளார்.

தோழர் **G. இராஜ்** TT சிவகாசி

தோழர் G. இராஜ் அவர்கள் 1-4-97 இல் TT ஆக பணியில் சேர்ந்து நமது BSNLEU சங்கத்தின் கிளை செயலராக, மாவட்ட சங்க நிர்வாகியாக பல காலம் பணியாற்றியவர். விருதுநகர் மாவட்டத்தில் குறிப்பாக சிவகாசி பகுதியில் நமது சங்க செயல்பாடுகளை ஊக்கத்துடன் செயல்படுத்தி வந்த தோழர் ராஜ் கடந்த 31-03-2018 அன்று பணி நிறைவு பெற்றுள்ளார். தனது பணி நிறைவை ஒட்டி மாநில , மாவட்ட, கிளை சங்கங்களுக்கு தலா 1000 ரூபாயும் , ஒப்பந்த ஊழியர் சங்கத்திற்கு ரூபாய் 500 ம் நன்கொடையாக வழங்கி உள்ளார்

தோழர் **R.மாதையன்** TT தருமபுரி

28.02.1982ல் ரெகுலர் மஸ்தூராக அரூரில் பணிக்கு சேர்ந்த தோழர் தோழர் சு.மாதையன் படிப்படியாக லைன்மேனாகவும் TMஆகவும் பதவி உயர்வு பெற்று 31.03.2018ல் கீரையாபட்டி தொலைபேசி நிலையத்தில் TTஆக பணியாற்றும் போது பணி நிறைவு செய்துள்ளார். நமது சங்கத்தின் துடிப்புடன் செயல்பட்டு வந்த தோழர் மாதையன் தனது பணி நிறைவினை ஒட்டி தமிழ் மாநில சங்கத்திற்கு ரூ.500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **P. கருணாநிதி** TT அரூர்

1981ல் லைன்மேனாக அரூரில் பணியில் சேர்ந்த தோழர் P.கருணாநிதி தனது 36 ஆண்டு கால சேவைக்கு பின் 28.02.2018 அன்று TTஆக பணி ஓய்வு பெற்றுள்ளார். கிளை சங்கத்தின் தலைவராக பல ஆண்டுகாலம் பணியாற்றிய முன்னணி தோழர்களில் ஒருவராக திகழ்தவர். அனைத்துஇயக்கங்களிலும் தன்னை முன்னிலைப்படுத்தி கலந்துக் கொண்ட தோழர் P.கருணாநிதி தனது பணி ஓய்வினை ஒட்டி தமிழ் மாநில சங்கத்திற்கு ரூ.500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **K.முருகன்** TT கம்பை நல்லூர் தருமபுரி

1993ல் அரூரில் ரெகுலர் மஸ்தூராக பணியில் சேர்ந்த தோழர் K.முருகன் டெலிகாம் மெக்கானிக்காக பதவி உயர்வு பெற்று கம்பைநல்லூர் தொலை பேசி நிலையத்தில் 25 ஆண்டுகாலம் பணியாற்றி 28.02.2018 அன்று பணிஓய்வு பெற்றுள்ளார். நமது சங்கத்தின் மீதுமிகுந்த பற்றுடைய தோழர் K.முருகன் தனது பணி ஓய்வினை ஒட்டி தமிழ் மாநில சங்கத்திற்கு ரூ.500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **K.கஜபதி** TT தருமபுரி

1981ல் லைன்மேனாக தருமபுரியில் பணியில் சேர்ந்த தோழர் K.கஜபதி தனது 36 ஆண்டு கால சேவையை முடித்து 28.02.2018 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். நமது சங்கத்தின் மீதுமிகுந்த பிடிப்புடன் செயல்பட்டு அனைத்து இயக்கங்களிலும் பங்கேற்ற தோழர் K.கஜபதி தனது பணி ஓய்வினை ஒட்டி தமிழ் மாநில சங்கத்திற்கு ரூ500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **M.சின்னப்பன்** OS(G)
திருவண்ணாமலை

12.05.1980ல் இலாகாவில பணியை துவங்கிய தோழர் M.சின்னப்பன் தனது38 ஆண்டு கால சேவையினை முடித்து 31.03.2018 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். நமது சங்கத்தில் இணைந்து பணியாற்றிய தோழர் சின்னப்பன், இயக்க பணிகளிலும் இலாகா பணிகளிலும் சிறப்பாக செய்து முடித்துள்ளார். நமது போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றுள்ள இவர் தனது பணி ஓய்வினை ஒட்டி தமிழ் மாநில சங்கத்திற்கு ரூ.500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

அனைவரின் பணி ஓய்வுக் காலமும் இனிதே அமைய மாநிலச் சங்கம் வாழ்த்துகிறது

ஒப்பந்த தொழிலாளர் குடும்பத்திற்கு குடும்ப நிவாரண நிதி

சமீபத்தில் மரணமடந்த குமரி மாவட்ட ஒப்பந்த தொழிலாளர் தோழர் A.மனோஜ் குமார் அவர்களின் குடும்ப நிவாரண நிதியாக 1,15,000 ரூபாய் வசூல் செய்து அவருடைய மனைவிக்கு வழங்கப்பட்டது. நிதி வழங்குவதற்கான சிறப்புக்கூட்டம் 24.03.2018 அன்று குழித்துறை தொலைபேசி நிலையத்தில் நடைபெற்றது. பெருந்திரளாக ஒப்பந்த ஊழியர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் TNTCWU மாநில செயலர் தோழர் C. வினோத்குமார், மாநில உதவிச் செயலர் தோழர் C.பழனிச்சாமி, TNTCWU மாவட்டச் செய்லர் தோழர் A.செல்வம், BSNLEU மாவட்டச் செயலர் P.ராஜி, TNTCWU மாவட்டத்தலைவர் R.சுயம்புலிங்கம், BSNLEU மாவட்டத்தலைவர் K.ஜார்ஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். மறைந்த தோழரின் குடும்பத்திற்கு EPFலிருந்து பென்சன் பெற்றிட தொடர் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

Published by **S.CHELLAPPA** on behalf of BSNL EMPLOYEES UNION, TAMILNADU CIRCLE Published from RK Srinivas Flats, No.21, Bharathiyar 1st Street, Pazhavanthangal, Chennai-600 114. Kancheepuram District. and Printed by S.KARLMARX Printed at S.K.PRINTERS, No.18/17, EWS, NH1, Eladhariyan Street, Maraimalai Nagar, Chengalpattu Taluk, Kancheepuram District. Editor : **S.CHELLAPPA,** Phone : 044-2267 3931, Mobile : 94440 31715, Email : bsnleutnc@gmail.com, Website : www.bsnleutnc.com

துணை டவர் நிறுவனத்தை திரும்ப பெற வலியுறுத்தி நடைபெற்ற தர்ணா போராட்ட காட்சிகள்

தருமபுரி

வேலூர்

திருப்பூர்

தஞ்சாவூர்

கும்பகோணம்

காரைக்குடி

சட்ட மேதை அம்பேத்கார் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்

கோயம்புத்தூர்

ஈரோடு

கோவில்பட்டி

NGC புத்தக கண்காட்சி

பழனி

திருச்செங்கோடு

THOLAI THODARBU THOZHAN Regd. with Registrar of Newspaper for India under No.TNTAM/2015/65855
Patrika Channel. Date of Publication : 27th of every month Registration No.TN/CC/(S)DN/550/16-18

வன்கொடுமை தடுப்பு சட்டத்தை நீர்த்து போகச்செய்யும்முயற்சிகளுக்கு எதிராக நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டங்கள்

CGM அலுவலகம்

CGM அலுவலகம்

பல்லடம்

புதுவை

நாகர்கோவில்

திருநெல்வேலி

ஆசிபா படுகொலைக்கு எதிராக நடைபெற்ற கண்டன ஆர்பாட்டங்கள்

குன்னூர்

தூத்துக்குடி

விருதுநகர்

கடலூர்

சேலம்

மதுரை